பக்கங்கள்:-26

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 15 | ஞாயிற்றுக்கிழமை | 28.04.2024 | அதிர்வு 271

## எந்த விவாதத்துக்கும் தயாராக இருக்கிறேன்

### சஜித் அறிவிப்பு



மே மாதத்தில் நடைபெறவுள்ள எந்த விவாதத்துக்கும் தான் தயார் என்றும், யார் 06▶

# தமிழர் தலைநகரில் உணர்வெழுச்சியுடன் தந்தை செல்வாவின் நினைவேந்தல் நிகழ்வு






(ஏ.எச். ஹஸ்பர்)

இலங்கைத்தமிழரசுக்கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலையில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கட்சியின் மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தந்தை செல்வா ஒத்து ஓடவும் இல்லை; சேரக் கூடாதவர்களோடு சேரவும் இல்லை

### நினைவேந்தல் நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

**“தந்தை செல்வாவின் அரசியல் அணுகுமுறையும் அவரின் சொந்தக் குணாதிசயமும் ஒன்றாகவே இருந்தன. அவர் ஒத்து ஓடுகின்றவர் அல்லர். அதாவது அடம்பன்கொடி திரண்டு இருக்க வேண்டும் என்பதற்காகச் சேரக் கூடாதவர்களோடு சேருபவர் அல்லர் அவர்.”**

**- இவ்வாறு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.** 07▶

### அனைத்து கட்சிகளையும் அரவணைத்து

# பொது வேட்பாளராகவே களமிறங்குவார் ரணில்!

### ரவி மீண்டும் கூறுகின்றார்



“சிறுபான்மையினக் கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளையும் இணைத்துக் கொண்டு கட்சி சாராத பொது வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான 06▶




நேற்றைய ஒரு நிகழ்வு பற்றிய விடயத்தை ‘அலசுவதற்காக’ ஒரு ‘பிளாஷ்பேக்’ தகவலுக்குப் போக வேண்டி இருக்கின்றது. அதுவும் கூட ‘அலசுவது’ பற்றிய விடயம்தான்.

இது குறித்து முன்னரும் ஏதோ ஓர் அனுபவப் பகிர்வில் குறிப்பிட்டேன் என ஞாபகம் உண்டு.

என் நினைவு சரி என்றால், இது சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னர்,1991ஆம் ஆண்டளவில் இடம்பெற்றது. யாழ். குடாநாடு பெரும்பாலும் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டிலும் நிர்வாகத்திலும் இருந்த வேளை. நாட்டின் அதிபராக பிரேமதாஸா இருந்தார். இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் தந்தையார். அவர் பிரதமராக இருந்த காலத்தில் அவருடன் பேசிப் 06▶




# பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்கேற்புடன் ‘வசத் சிரிய 2024’ புத்தாண்டுக் கொண்டாட்டம்

“வசத் சிரிய – 2024” சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம் நேற்று கொழும்பு ஷங்ரிலா பசுமை மைதானத்தில் ஆரம்பமாகியதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பெருந்திரளான மக்கள் ஆரம்பம் முதலே இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர், அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களை இணைத்து இந்த புத்தாண்டு கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

அரசதுறை, திறந்த துறை மற்றும் விருந்தினர் துறை ஆகிய 03 பிரிவுகளின் கீழ் பல போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொள்கின்றனர்.

பாரம்பரிய கிராம சமூகத்தில் கிராமத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான அழகிய தொடர்பை வெளிப்படுத்தும் வகையில், கிராமத்து வீட்டுடன் கூடிய சூழலின் மாதிரியொன்றும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளதுடன், இனிப்புகள், உடைகள், சிங்களப் புத்தாண்டு சடங்குகள், கிராமிய விளையாட்டுக்கள் உள்ளிட்ட பல கண்காட்சிக் கூடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இராட்டினம், மூங்கில் வெடிக் காட்சிகள், விற்பனை நிலையங்கள் உட்பட மருத்துவ வீடும் மைதானத்தை அலங்கரித்தன.

பெரியவர்களும், பிள்ளைகளும் மிகுந்த ஆர்வத்துடன் போட்டிகளில் கலந்து கொண்டனர். வெற்றி பெறும் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

புத்தாண்டு விழா நடைபெறும் இடத்திற்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கிருந்த மக்களுடன் சிநேகபூர்வவமாக கலந்துரையாடினார். சில போட்டிகளையும் பார்வையிட்டார்.

அத்துடன், கிராமிய வீடு மற்றும் மருத்துவ வீட்டுக்கும் விஜயம் செய்த ஜனாதிபதி, அவற்றை பார்வையிட்டமையுடன், அவற்றை கண்டுகளிக்க வந்திருந்த வெளிநாட்டவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

போட்டிகளில்வெற்றிபெற்றவர்களுக்குபரிசுகள்வழங்குவதற்காக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர் விஜயதாஸா ராஜபக்ஷ, விளையாட்டு இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி ஊடகப் பிரிவு பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்க மற்றும் அனுசரணை வழங்கும் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் ஏனைய பாதுகாப்புத் திணைக்களத் தலைவர்கள் மற்றும் கௌரவ அதிதிகளும் கலந்துகொண்டனர்.














# கற்பிட்டியில் 37 கிலோ தங்கம் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் தேடப்படும் ஐந்து நபர்கள்

**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

கற்பிட்டியில் 37 கிலோ தங்கம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேகநபர்கள் ஐவரை கைது செய்ய இலங்கை பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் கற்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவரை கடத்தி 37 கிலோ தங்கத்தை திருடிய சந்தேகநபர்கள் தேடப்பட்டு வந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கற்பிட்டி சுற்றுவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் பெயரிடப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 5 பேரும் தமது வீடுகளை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை 071 8591763 அல்லது 071 8594916 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

# பாரதிபுரம் படுகொலை வழக்கு: 4 பொலிஸாருக்கு ஆயுள்சிறை!

## 26 வருடங்களின் பின்னர் தண்டனை

தம்பலகாமம் – பாரதிபுரத்தில் இடம்பெற்ற ஆள்கொலைச் சம்பவமொன்றில் தொடர்புபட்டிருந்த நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு 26 வருடங்களின் பின்னர் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஆள்கொலை தொடர்பிலான சட்டவிரோத ஒன்றுகூடலின் பங்காளிகளாக இருந்தார்கள் என்ற குற்றசாட்டில், 1998 ஆம் ஆண்டு திருகோணமலை பாரதிபுரத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 4 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியும் தற்போதைய குளியாப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதியுமான மனோஜ் தல்கொடபிட்டிய வினால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் – பாரதிபுரம் கிராமத்தில் நிராயுதபாணியாக இருந்த 8 தமிழ் பொதுமக்கள் மீது ஒரு குழுவினர் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டு கொலை செய்தனர். இதன்போது அந்த இடத்தில் சட்டவிரோத ஒன்றுகூடலில் இருந்ததாக இந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.



சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 4 பொலிஸ் அதிகாரிகளில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் இரண்டு சார்ஜன்ட்க ள் உள்ளடங்குகின்றனர்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த ஒரு திகதியில் இந்த குற்றச் செயல் இடம்பெற்றுள்ளதாக பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.




# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் வர்த்தக சமூகத்தின் மீது முழு நம்பிக்கை உண்டு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதும், அதிக போட்டித்தன்மை கொண்டதுமான, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த நாட்டின் வர்த்தக சமூகம் மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கின்றது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான மாவட்ட 3220 சர்வதேச ரோட்டரி கழகத்தின் 2023/24 வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கை பயணிக்க வேண்டிய பாதையை தீர்மானிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். அதன்போது எந்த வழியில் நாம் செல்ல வேண்டும் என்பதை இந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். நாம் இங்கிருந்து நகர்வோமா, நாம் இங்கேயே நின்றுவிடுவோமா, அல்லது பின்னோக்கி செல்ல வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

இன்று நான் சந்தித்த ஓர் இளைஞர் நாட்டிற்கான உங்கள் திட்டங்கள் என்னவென கேட்டார். இந்த நாட்டின் படித்த மக்களுக்காக என்ன திட்டங்களை எடுத்துள்ளீர்கள்? நாட்டின் பௌதீக உட்கட்டமைப்பை மேம்படுத்த நீங்கள் என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்? அப்படி எந்த திட்டமும் இல்லை என்றேன். நான் சந்தைப் பொருளாதாரத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்க முடியும் என்று நான் அவரிடம் கூறினேன்.

அதன்போது சந்தை சக்திகள் இந்தத் திட்டங்கள் அனைத்தையும் முடிவு செய்யும். நமது கொள்கை கட்டமைப்பு என்ன என்பதை நாம் தீர்மானிக்கலாம். அதன்படி, அடுத்த மூன்று, நான்கு ஆண்டுகளில் என்னென்ன திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பதை முடிவு செய்து, செயல்படுத்தி, தேவையான மாற்றங்களைச் செய்யலாம்.

ஆனால், எங்களுக்கு வளர்ச்சியைத் தரும் ஒரு நிலையான திட்டம் குறித்து நீங்கள் சிந்தித்தால், அதைச் செய்ய முடியாது என்று நான் அவரிடம் சொன்னேன். சந்தைச் செயற்பாடுகளில் எவ்வாறு தாக்கம் செலுத்துவது வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சந்தைச் சக்திகளை எவ்வாறு கையாள்வது அல்லது சந்தை சக்திகளை எவ்வாறு இயக்குவது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.


எனவே நாம் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். ஓர் அரசாங்கம் நியமிக்கப்பட்ட பிறகு ஒரு ஐந்தாண்டு திட்டம் முன்வைக்கப்படுகிறது. அந்தத் திட்டத்தின்படி அரசாங்கமே அனைத்தையும் வழங்குகிறது. எமக்கு இவ்வளவு காலமும் திட்டங்கள் மாத்திரமே இருந்தன. அதனால் தான் இன்னும்

05











# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் வர்த்தக சமூகத்தின் மீது முழு நம்பிக்கை உண்டு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வறுமையில் வாடுகிறோம்.

யுத்தத்திற்குப் பிறகு, வியட்நாம் நம்மை விட மோசமான நிலையில் இருந்தது. 1991இல், வியட்நாமின் தொழில்துறை அமைச்சர் வந்து, வெளிநாட்டு முதலீட்டை எப்படி ஊக்குவிக்கிறோம் என்று கேட்டார். அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பது எப்படி என்பதை அவரிடம் கற்றுக் கொள்ள இன்று நான் வியட்நாம் செல்ல வேண்டும். அவர்கள் மாறினர். நாங்கள் ஒரே இடத்தில் இருந்தோம்.

உங்களுக்கு மலேசியா மற்றும் சிங்கப்பூர் பற்றி என்ன கூற முடியும்? இந்த ஒவ்வொரு நாடுகளையும் பற்றி நாங்கள் பேசுகிறோம். அந்த நாடுகள் இருக்கும் இடத்தில் நாங்கள் இருக்க விரும்புகிறோம். ஆனால் அந்த நாடுகளின் நிலையை அடைய, தேவையான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இப்போது நாம் அத்தகைய நிலையை அடைந்துள்ளோம்.

இனிமேலும் தேவையான முடிவுகளை எடுக்காமல் இருக்க முடியாது. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதில் அர்த்தமில்லை. எந்த மாதிரியான பொருளாதாரம் வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, அதை ஒரு மாதிரி மூலம் மாத்திரமே செய்ய முடியும். இது மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம்.

இந்தியா, சீனா, அமெரிக்கா அல்லது ரஷ்யாவில் எங்களுக்கு பெரியசந்தைஇல்லை.பலநாடுகளில்உள்ளகனியவளங்கள்நம்மிடம் இல்லை. நாம் அதிர்ஷ்டவசமாக இந்து சமுத்திரத்தில மூலோபாய ரீதியாக அமைந்துள்ள ஒரு சிறிய தீவு.

இப்பகுதியில் பொருளாதார மையமாக மீண்டும் முக்கியத்துவம் பெறுகிறது. இப்படிப்பட்ட உலகில் நாம் எப்படி முன்னேறுவது? நாம் இனி கற்பனை உலகில் வாழ்கிறோமா? அல்லது தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோமா என்பது நீங்கள் அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

ஏனெனில் நாம் மேற்கொண்டுள்ள பொருளாதார ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகள் இந்த வருடத்துடன் முடிவடையும். நாங்கள் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் பாரிஸ் சமவாயத்துடன் கலந்துரையாடி வருகிறோம். கடன் வழங்குநர்களுடன் அடைய வேண்டிய பெரும்பாலான விடயங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் ஒரு விடயம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். அதுவும் விரைவில் தீர்க்கப்படும்.

ஆனால் நாம் இங்கிருந்து எங்கு செல்வது? பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியுள்ளோம். நாம் உறுதிப்படுத்திய பொருளாதாரம் இறக்குமதி சார்ந்த பொருளாதாரம். இந்த இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் நாம் முன்னேறிச் செல்கிறோமா? அப்போது நான் கடந்த காலத்தில் செய்த காரியங்கள் அனைத்தும் பயனற்றதாகிவிடும்.

ஏனென்றால் இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் இதுபோன்ற நெருக்கடியை மீண்டும் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே இந்த முடிவை நீங்கள் அனைவரும் எடுக்க வேண்டும். அதை யாரும் தவறவிட முடியாது.

இதுதான் இன்று நாடு எடுக்க வேண்டிய முடிவு. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தொடர்வதா அல்லது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதா என்ற பிரச்சினை இல்லை. இரண்டாவதாக கவனிக்கப்பட வேண்டிய கேள்விகள் அவை. நான் குறிப்பிட்டது போல் மக்களுக்கு பல பிரச்சினைகள் எழுகின்றன.

நமது கல்வி முறை என்ன? நாம் அதை மாற்ற வேண்டுமா இல்லையா? அதை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால் நமது எதிர்காலம் என்ன? அதற்கான முடிவுகளை எடுக்க நாம் தயாரா? ” – என்றார்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பழகிய பரிச்சயம் எனக்கு உண்டு.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஒரு நிகழ்வு. புலிகளின் கீழ் இயங்கிய 'புலிகளின் குரல்' வானொலியின் அல்லது 'நிதர்சனம்' தொலைக்காட்சி சேவையின் ஆண்டு விழா அது. ஞாபகம் சரி என்றால் அது இரண்டாவது ஆண்டு விழா. அந்த ஊடகக் கட்டமைப்புக்கு பரதன் என்ற போராளி பொறுப்பாளராக இருந்தார். பிற்காலத்தில் 'தினக்குரல்' வார வெளியீடு மற்றும் 'ஈழநாடு' பத்திரிகைகளின் முன்னாள் ஆசிரியரும், இப்போது 'தமிழர் பொருண்மியம்' ஏட்டின் ஆசிரியருமான இராசநாயகம் பாரதியின் அண்ணன் தான் இந்த பரதன். யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் நானும் பரதனும் சமகாலத்தவர்கள். நண்பர்களும் கூட.

ஆண்டு விழாவிற்கு அவர் அழைத்திருந்தார் என்று ஞாபகம். நானும் தலைகாட்டி இருந்தேன். குமாரசுவாமி மண்டபத்தில் பின்வரிசைக் கதிரையில் வழமை போல நண்பர்களுடன் வாய்ச் சவடால் பண்ணி கொண்டு இருந்தேன்.

இப்போது வரை வில்லுப்பாட்டில் பெரிதும் மதிக்கப்பட்டும் பிரபல வில்லிசை கலைஞர் ஒருவரின் வில்லிசை மேடையில் நடந்து கொண்டிருந்தது. என் கவனம் அதில் இருக்கவில்லை. பக்கத்தில் இருந்தவர்களுடன் வாய்ச் சமரில் நான் பிஸியாக இருந்தேன்.

திடீரென முன் வரிசையில் இருந்த பொறுப்பாளர் பரதன் மேடையை நோக்கிச் சீற்றத்துடன் பாய்ந்து ஏறுகின்றமையையும், பின்னர் திரைச் சீலையை விரைந்து இழுத்து மேடையை அவர் மூடுகின்றமையையும் கண்டேன். வில்லிசை சட்டென்று நின்றது. திரைச் சிலைக்கு பின்னால் பரதன் ஏதோ கத்திப் பேசுவது சாடை மாடையாகக் கேட்டது. தொடர்ந்து பரதனின் குரலில் ஒலிபெருக்கி அறிவிப்பும் வந்தது.

"இத்துடன் வில்லிசை முடிவுற்றது. அடுத்த நிகழ்வு சற்று நேரத்தில் ஆரம்பமாகும்." – என்றது அந்த அறிவிப்பு.

சில நிமிடங்களில் வில்லிசைக் கலைஞரும், அவரின் அணிசெய் கலைஞர்களும் தங்கள் கருவிகள், வாத்தியங்களுடன் முகத்தைத் தொங்கப் போட்டபடி மேடையின் பின்புறத்தால் இறங்கி வந்து செல்வதைக் கண்டேன். அவர்களைப் பார்க்க பாவமாகவும் பரிதாபமாகவும் கூட இருந்தது.

என்ன நடந்தது என்று விசாரித்தேன்.

பிரேமதாஸா அரசின் அடக்குமுறைகள், நடவடிக்கைகளை வில்லுப்பாட்டுச் செய்தியில் கண்டித்து விவரித்து கொண்டிருந்த வில்லிசை கலைஞர், தான் கூறுவது நகைச்சுவை என்று எண்ணிக் கொண்டு, கூற்றின் தாற்பரியமும் ஆழமும் புரியாமல், "அவர் (பிரேமதாஸா) தமது பாவ மூடைகளை அவிழ்த்து அலசுகிறார், அலசுகிறார், கழுவுகிறார், கழுவுகிறார் அவரது ஊத்தை கழுவப்பட்டுப் போவதாக இல்லை. அவர் வெள்ளாவி வைத்தாலும் அந்தப் பாவங்கள் போகா... துணி வெளுக்காது...!" என்று திரும்பத் திரும்ப அழுத்திக் கூறியிருக்கிறார் வில்லிசைக் கலைஞர். (அவர் கூறிய வார்த்தைகள் சரியாக இவைதானா என்பது எனக்கு உறுதியாக தெரியவில்லை. நினைவில் இல்லை. ஆனாலும் இந்த சாரப்பட அவர் கூறிக் கொண்டிருந்தார் என அறிந்தேன்.)

அவ்வளவுதான். சீறிப் பாய்ந்த பரதன் சத்தமிட்டு அந்த நிகழ்ச்சியை அத்துடன் முடித்து, அந்த மூத்த வில்லிசைக் கலைஞரைக் கலைக்காத குறையாக அனுப்பி வைத்தார்.

எதிரியை வைவதிலும் கூட ஓர் ஒழுக்கம் – ஒழுங்குமுறை – மனிதப் பண்பு – நாகரிகம் – இருக்க வேண்டும் என்று கருதிய போராளி பரதன். இப்போது அவர் இல்லை.

பரதன் ஏன் அப்படி நடந்து கொண்டார், அதில் என்ன நியாயம் இருந்தது என் பவற்றை எல்லாம் நான் விவரிக்கப் போவதில்லை. அவற்றை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகிறேன்.

சரி இனி விடயத்துக்கு வருவோம்.

நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை முன்னெடுத்த தந்தை செல்வா நினைவு தின விழா திருகோணமலையில் நடைபெற்றது. பெரும் திரளாக மக்கள் கலந்து கொண்டனர்.

முன்வரிசையில் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவரும், கட்சியின் புதிய செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டு இன்னமும் பதவியேற்க முடியாமல் இருக்கும் குகதாசன், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் தலைவராக வரவேண்டிய சிறிதரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன், சாணக்கியன் உட்பட தமிழரசின் பெருந்தலைகள் எல்லாம் இருந்தன.

ஒரு கவியரங்கம். எனக்குக் கிடைத்த தகவல் சரி என்றால், 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது அதன் தலைப்பு.

அதில் பங்கு பற்றிய இளம் கவிஞர் ஒருவர் மேற்படி கட்சியின் மூத்த தலைவர்களை எல்லாம் முன்னால் வைத்துக் கொண்டு, கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா. சம்பந்தனைத் தமது கவித்திறத்தால் மிக மோசமாக – மட்டமான – வார்த்தைகள் மற்றும் அணுகுமுறைகள் மூலம் 'அர்ச்சனை' செய்து நிகழ்வின் தரத்தைத் தாழ்த்திக் கொண்டார் என்று கூறப்பட்டது.

திருகோணமலை நகரம் சம்பந்தனின் இடம். அவர் அதன் அசைக்க முடியாத எம்.பி. தற்போது வயது மூப்பு, நரை, திரை போன்றவற்றால் பாதிப்புற்று, இயக்கம் குறைந்து இருக்கின்றார். ஆயினும் அவரை கட்சியின் சிரேஷ்ட தலைவராக கட்சியும் தமிழினமும் மதிக்கின்றது. அவரை கொச்சைப்படுத்தி கவிதையால் அர்ச்சனை செய்த போது, எல்லாத் தலைவர்களும் பார்த்திருந்தனர் என திருமலையில் என் அன்பு நெஞ்சம் ஒன்று வேதனையுடன் தொலைபேசியில் குமுறியது.

எனக்கு அப்போது பரதன் நினைவுக்கு வந்தார். நேற்றைய முன் வரிசையில் ஒரு பரதனும் இருக்கவில்லை. அதனால் கவியரங்கமும் தடைப்படவில்லை.

தந்தை செல்வா சொன்னது போல தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். சம்பந்தன் அங்கிருந்திருந்தால் 'காளியாச்சி காப்பாற்றுவார்' என்று உறுதியாகக் கூறியிருப்பார்.

## எந்த விவாதத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வெற்றி பெற்றாலும் அதன் மூலம் பகிரப்படும் நேர்மையான கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"விவாதம் அவசியம் என்பது போலவே நாட்டுக்காக சேவையும் ஆற்றப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவுக்கும் இடையிலான விவாதம் மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் எனக்கும் இடையிலான விவாதங்களுக்குத் தயாராக இருக்கின்றோம்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதில் தலையிட்டு இரண்டு விவாதங்களையும் மே மாதம் நடத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தில் யார் வெற்றி பெற்றாலும் இதன் மூலம் பகிரப்படும் நேர்மையான தரமான கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மக்களுக்குப் போலியான கூட்டங்களைக் காட்டி மக்களை ஏமாற்றவோ பொய்யான கதைகளைக் கூறி நழுவிச் செல்லவோ கூடாது. நான் எந்த விவாதத்துக்கும் தயாராகவுள்ளேன்." – என்றார்.

## பொதுவேட்பாளராகவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"தேர்தலுக்கு நேர்மையாக முகங்கொடுக்க அஞ்சி, மக்களை ஏமாற்றி வாக்கு வேட்டை நடத்துவதற்காக சிலர் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கி வருகின்றனர். செய்ய முடியாத விடயங்களைக்கூட உறுதிமொழியாக வழங்கி வருகின்றனர்.

இதனால் அரசியல் கட்சிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல்போயுள்ளது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சி செய்யக்கூடிய விடயங்களையே கூறி வருகின்றது. கசப்பாக இருந்தாலும் உண்மையைக் கூறுவது மேலானதாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் மட்டும் அல்ல அனைத்து கட்சிகளுடனும் எமக்குத் தொடர்பு உள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அனைவரையும் இணைத்துக்கொண்டு கட்சி சாராத வேட்பாளராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார்." – என்றார்.

## தந்தை செல்வா ஒத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை செல்வநாயகத்தின் 47 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தந்தை செல்வநாயகம் சென்தோமஸ் கல்லூரியில்கற்பிக்கும்வேளையிலேசகோதரனின் உடல்நிலை கருதி விடுமுறை கோரியபோது அதிபர் மறுத்தமையால் அன்றைய தினமே இராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு வெளியேறினார். அதன் பின்பு வெஸ்ரி கல்லூரியில் அவர் பணியாற்றும்போது ஆங்கிலேயர் ஆட்சியில் வேட்டி சால்வை அணிந்து பணியாற்ற முடியாது என்றபோது அங்கும் வேலையை இராஜிநாமா செய்துவிட்டு வெளியேறினார்.

அனைவரும் இணைந்து செல்வோமே என நினைத்தவர் அல்லர் தந்தை செல்வா. அவரது அரசியல் அணுகுமுறையும் அவரது தனிப்பட்ட குணாதிசயத்துடன் ஒத்ததாகவே இருந்தது. இல்லையென்றால், 1947 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தால் அழைத்து வரப்பட்டு காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட வைத்து வெற்றியீட்டினார். எனினும், நாடாளுமன்றம் வந்து ஓரிரு ஆண்டுகளிலேயே பொன்னம்பலம் தலைமையில் பொன்னம்பலம் அணி எனவும், உப தலைவர் செல்வநாயகம் தலைமையில் செல்வா அணி எனவும் இரண்டாகப் பிரிந்தது.

பிரிய வேண்டும் என்பதற்காகத் தந்தை செல்வா பிரியவில்லை, பிரஜாவுரிமைச் சட்டத்தை அன்றைய இலங்கைத் தலைவர் டி.எஸ்.சேனாநாயக்க அறிமுகப்படுத்தியபோது அது தீங்கானது, அதனை ஆதரிக்க முடியாது, 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த இலங்கை - இந்தியக் காங்கிரஸ் அந்த உறுப்பினர்களின் பிரஜாவுரிமையே அற்றுப்போகும் விதமாக அந்தச் சட்டம் இயற்றப்பட்டு கொண்டு வந்தபோது அதனை எதிர்க்க வேண்டும் எனக் கட்சிக்குள்ளேயே வாதாடினார். கட்சி அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. இதனால் கொள்கையின் நிமித்தம் கட்சியை இரண்டாகப் பிளந்தார். 101பேர் இருந்த நாடாளுமன்றத்தில் 6 பேர் கொண்ட கட்சியில் இருந்து 3 பேர் அதற்கு எதிராக வாக்களித்தனர். கட்சி இரண்டாகப் பிரிந்தது. ஒற்றுமை என்ற கோஷத்துக்காகத் தவறைச் செய்ய அவர் விரும்பவில்லை. ஒற்றுமை அல்ல, கொள்கையே முக்கியம், எங்களுடைய நிலைப்பாடு முக்கியம், எதற்காக மக்களுக்காக எழுந்து நிற்கின்றோம் என்பது முக்கியம், அதைச் செய்யத் துணிந்தார்.

1949 ஆம் ஆண்டு புதிதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியை அவர் ஆரம்பித்தார். வருட ஆரம்பத்தில் மாவிட்டபுரத்தில் அண்ணன் மாவை.சேனாதிராஜாவின் வீட்டுக்கு அருகிலே கட்சியின் அங்குரார்ப்பணம் நடந்தது. எனினும், டிசம்பரில் கொழும்பில்தான் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வை உத்தியோகபூர்வமாக அவர் நடத்தினார். அதற்கு முன்னர் பல முஸ்தீபுகள் இடம்பெற்றபோது அதைக் கற்களால் எறிந்து குழப்பினார்கள், அடித்துத் துரத்தினார்கள். இவையெல்லாம் யாழ்ப்பாணத்திலேயே இடம்பெற்றன. அதனால்தான் 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு - மருதானையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்தார்.

பிடித்த கொள்கையில் அவர் உறுதியாக இருந்தார். அந்த வழியைத் தன்னுடைய மக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் அவருக்குத் தெரியும். 3 ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தலிலே போட்டியிட்டு தோல்வி கண்டார். தமிழரசுக் கட்சி சார்பில் கோப்பாயில் வன்னியசிங்கமும், திருகோணமலையில் இராஜவரோதயமும் மட்டுமே வெற்றியீட்டினர். முதல் தேர்தலிலேயே தமிழரசுக் கட்சியை வெற்றிகொள்ள வைத்த பெருமிதம் திருமலைக்கு உண்டு. ஆனாலும், கட்சி தோல்வியடைந்தது.

மக்கள் தனது கொள்கையைப் புறக்கணித்து விட்டார்கள் என அவர் விட்டுவிடவில்லை. அந்தத் தேர்தலிலே காங்கேசன்துறைத் தொகுதியில் தான் தோற்றபோது அவர் நீதிமன்றிலே வழக்கு ஒன்றைத் தொடுத்தார். தேர்தல் வெற்றி தவறானது, முடிவு தவறானது எனத் தானே வாதாடி வழக்கொன்றைத் தொடுத்தார். அந்த வழக்கிலேயும் அவர் தோற்றார். தோற்றது மட்டுமன்றி அன்று வழக்குச் செலவாக 40 ஆயிரம் ரூபாவையும் அவர் கட்ட வேண்டியும் இருந்தது. அதையும் செய்தார். ஆனால், 1956 ஆம் ஆண்டில் இருந்து இளையவர்களையும், புதியவர்களையும் கட்சிக்குள் சேர்த்தார். வேட்பாளர்களாக நிறுத்தியவர்கள் எல்லாம் 30 வயதுக்கும் குறைந்தவர்கள். பெரு வெற்றி கண்டார். அதற்குப் பிறகு இன்று வரைக்கும் அவர் வகுத்த சமஷ்டிக் கொள்கைக்குத் தமிழ் மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் தொடர்ச்சியாக வாக்களித்து வருகின்றார்கள்.

ஆகவே, அவரது அரசியல் அணுகுமுறையை அறிந்திருப்பது அல்லது பின்பற்றுவது அத்தியாவசியம். இந்த விடயத்திலே தந்தை செல்வா சொன்ன இரண்டு விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன். இதே மண்ணிலே தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடு 1951ஆம் ஆண்டு நிகழ்ந்தபோது தந்தை செல்வாவின் பேருரையில் சொன்ன ஒரு வாசகம், "ஓர் இனம் அழியாமல் இருப்பதற்குப் பல ஏற்றம் தேவை. ஒன்று அந்த இனத்தின் எண்ணுத்தொகை குறையாமல் இருப்பது. இரண்டாவது அந்த இனம் வசிக்கும் பிரதேசம் பறிபோகாமல் இருப்பது."

இந்த இரண்டும் இந்தத் தீவிலே எங்கள் இனம் அழியாமல் இருக்க வேண்டுமானால் நாம் எண்ணிக்கை குறையாமல் இருக்க வேண்டும், நாம் வதியும் பிரதேசம் பறிபோகாமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்வதாக இருந்தால் நாம் வசிக்கும் பிரதேசத்தில் ஆட்சி முறை மாற்றம் ஏற்பட வேண்டும் என்று அவர் தனது சமஷ்டி கொள்கையை முன்வைத்தார்.

1956 ஆம் ஆண்டிலேயே தனிநாட்டுக் கோரிக்கை எழுந்தது. அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம் ஈழம் என்று பெயர் கொடுத்தார். ஆனால், தந்தை செல்வா அதை அந்த வேளை ஏற்கவில்லை.

தொடர்ச்சியாக பலர் தனியாகப் பிரிந்து போவதுதான் ஒரே வழியெனக் கூறிய போதும் அவர் அதனை ஏற்கவில்லை. 1960 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடியபோது வவுனியாவைச் சேர்ந்த சிற்றம்பலம் தனிநாடுதான் ஒரே வழி என்ற தீர்மானத்தை முன்வைத்தார். அப்போது தந்தை செல்வா சொன்னது "இது வன்முறையில் முடியும். ஆயுதப் போர் பிரச்சினையைத் தீர்க்காது" என்று கூறி அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற விடவில்லை.

11ஆவது மாநாடு உடுவிலே நடந்த போது இளைஞர் அணி - அதாவது வாலிபர் முன்னணியினர் வந்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் எனச் சொன்னபோது அவர்களுக்கு அறிவுரை கூறி அதனை நீங்கள் முன்மொழிய வேண்டாம், இதனை நான் எதிர்த்தவன் அல்லன், இது எமது மக்களுக்குப் பாதகமாக முடியும் எனக் கூறி அதனையும் தந்தை செல்வா தடுத்தார்.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலிலே வி.நவரட்ணம் சுயாட்சிக் கழகத்தை உருவாக்கி தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலிலே போட்டியிட்ட போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைப்பவர்களிற்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் சொல்லியிருக்கின்றோம்.

அதே தந்தை செல்வா 1972 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு தொகுக்கப் பட்டபோது மாற்று யாப்பை முன்வைத்தார். சமஷ்டி அடிப்படையிலே அந்த யாப்பு இருந்தது. எமது வெள்ளி விழா மலரிலும் அது இருக்கின்றது. அந்த யாப்பிலே பல விடயங்களை அவர் கோரியிருந்தாலும் இறுதியிலே எமது கட்சியின் சார்பில் வி.தர்மலிங்கம் 5 பிரேரணைகளை (நாடாளுமன்றத்தில்) முன்வைத்தார். அனைத்தும் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டபோது தந்தை சொன்னார், "இனி, நாளையில் இருந்து நாம் இங்கே வர மாட்டோம். நாம் வெளிநடப்புச் செய்து இதனை ஒரு நாடகமாக மாற்ற விரும்பவில்லை. ஆனால், நாளையில் இருந்து நாம் இங்கு வரமாட்டோம்" - என்று சொன்னார்.

அதனைத் தொடர்ந்து இராஜிநாமா செய்தார். இடைத்தேர்தலும் இரண்டரை ஆண்டுகள் இடம்பெறாமல் இருந்தது. 1975ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இடைத்தேர்தலிலே அவர் பெருவெற்றியீட்டினார். அதன் பிறகுதான் தமிழர் கூட்டணி உருவாக்கப்பட்டது.

1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி வட்டுக்கோட்டை தனிநாட்டுத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், எமது கட்சி தனிநாடு ஒன்றை நிறுவ முனைகின்றது. இது இலேசான காரியம் அன்று, வில்லங்கமானது என்பதை நாம் அறிவோம்" - என்று அதனை விவரித்துச் சொல்லி விட்டு, எமது நடவடிக்கை சாத்வீகமானது எனச் சொன்னார்." - என்றார்.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அமெ. படிக்கப் போகும் பாடம்

‘தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டுவது’ என்பார்கள். அப்படியாகியிருக்கின்றது பாலஸ்தீனத்தின் காசா மீதான இஸ்ரேலின் மனிதாபிமானமேயற்ற - மிருகத்தனமான - மிகக் கொடூரமான - ஈவிரக்கமே இல்லாத - படுபாதக - தாக்குதல்களின் விளைவு.

தாக்குதல் நடப்பது என்னவோ மத்திய கிழக்கில். நடத்துவது இஸ்ரேல். ஆனால் அதை நியாயப்படுத்தும் விதத்தில் நடந்து கொள்ளும் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் தலைக்கு மேல் கத்தியாக வந்து குந்தியிருக்கின்றது இந்த தாக்குதலின் விளைவு. இன்னும் ஏழு மாதங்களில் நடக்க போகும் அமெரிக்க அதிபர் தேர்தலில் அவருக்கு எதிரான ஒட்டுமொத்த எதிர்ப்பலைகளையும் ஒன்று திரட்டி, பெரும் சுனாமியாக்கும் வேலையை இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் கனகச்சிதமாக முன்னெடுப்பதுதான் பைடனின் கெட்ட காலம்.

இஸ்ரேலின் இந்த முரட்டுத்தனமான - பிடிவாதமான - மனிதாபிமானமற்ற - காட்டுமிராண்டித்தன - நடவடிக்கைகளுக்கு எதிரான அமெரிக்க இளம் சமுதாயத்தின் உணர்வெழுச்சி அமெரிக்கா தழுவிய விதத்தில் ஒரு கிளர்ச்சியை உருவாக்கி வருகின்றது.

கொலம்பிய பல்கலைக்கழகத்தில் சூடு பிடித்த இஸ்ரேலின் போர் ஆக்கிரமிப்பிற்கு எதிரான இயக்கம் இப்போது அமெரிக்காவின் பல பகுதிகளிலும் தீவிரமெடுத்து வேகம் பெற்றிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கில் இளம் எதிர்ப்பாளர்கள் வீதிகளில் இறங்கியமையை அடுத்து அவர்கள் அமெரிக்க பாதுகாப்பு தரப்பின் மிருகத்தனமான அடக்கு முறையை எதிர்கொள்கின்றனர் எனச் செய்திகள் வெளியாகிய வண்ணம் உள்ளன. அவை பற்றிய காணொலிகள், செய்திகள் அமெரிக்கா எங்கும் பரவி, இளம் அமெரிக்கர்களின் இரத்தத்தை கொதிக்க வைக்க, உணர்வு முறுக்கேறி விவகாரம் மெல்ல சுனாமியாக வடிவம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க பல்கலைக்கழகங்கள் - இளம் சமூகத் தரப்புகள் - போர் எதிர்ப்புப் போராட்டங்களுக்குப் புதியவையேயல்ல. 1960 களின் பிற்பகுதியிலும், 1970 களின் ஆரம்பத்திலும் வியட்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்க இளைஞர்கள் நடத்திய மூர்க்கத்தனமான எதிர்ப்பு நடவடிக்கைகளினாலேயே வியட்நாமிலிருந்து மூடை, முடிச்சுகளையும் கட்டிக் கொண்டு அவமானத்தோடு தனது படைகளை திரும்ப அழைக்க வேண்டியதாயிற்று அப்போதைய அமெரிக்க அரசு. அப்போது இளைஞர்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டம் அமெரிக்கா முழுவதும் உயர் கல்விக்கான மையங்களை உலுக்கியது. அந்த எழுச்சிக்குப் பயந்தே அமெரிக்க அரசு அப்போது அடிபணிந்தது.

எனினும், அதற்குப் பின்னரும் வளைகுடாப் போர், லத்தின் அமெரிக்க நாடுகளில் ஆட்சி மாற்றங்களுக்காக அமெரிக்க ஆட்சி பீடம் முன்னெடுத்த அநாகரிகமான - வெறுக்கத்தக்க - நகர்வுகள் மற்றும் தலையீடுகள் போன்றவற்றுக்கு எதிராக அமெரிக்க இளம் சமூகம் போராட்டங்களை நடத்தியே வந்திருக்கின்றது.

அந்தப் போராட்டங்களின் போதும், 2011 இல் வோல் ஸ்ட்ரீட் ஆக்கிரமிப்பு பிரச்சாரத்தின் போதும், பெரும் ஊடக நிறுவனங்களின் - கார்ப்பரேட் கம்பெனிகளின் - கருத்துத் திணிப்பு இளம் சமூகத்தின் உணர்வெழுச்சியை மதிப்பிழக்கச் செய்தது.

ஆனால் தற்போதைய இளம் சமூகத்தின் போர் எதிர்ப்பு கிளர்ச்சிக்கு முன்னால், அந்தப் பெரு நிறுவனங்கள் தமது கருத்துத் திணிப்பை அல்லது திசை திருப்பலை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாதுள்ளது என்பதுதான் இப்போதைய நிலைமை தலைகீழாவதற்குக் காரணம்.

இந்த முறை இளம் சமூகம் மேற்கொள்ளும் - ஜனநாயக உரிமையின் அடிப்படையில் முன்னெடுக்கும் - கருத்தியல் வெளிப்பாட்டு உரிமை அமெரிக்கப் பொலிஸாரின் மோசமான அடக்குமுறை மூலம் நசுக்கப்படும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது. ஆனால் அந்த அடக்குமுறையே இளம் சமூகத்தின் கிளர்ச்சியை மென்மேலும் தீவிரப்படுத்தி, ஊக்கப்படுத்தும் எரிபொருளை வார்க்கின்றது என்பதுதான் நடுநிலை அவதானிகளின் கருத்து.

பைடன் நிர்வாகத்தின் அடக்குமுறை அணுகுமுறை அதன் போக்கைக் கேலிக் கூத்தாக்கி இருக்கின்றது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் பைடனைத் தேர்தல் களத்தில் பெரும்பாலும் எதிர்கொள்ளப் போகின்ற டொனால்ட் ட்ரம்ப் தனது ஆட்சி அதிகாரத்தின் கீழ் அமெரிக்கா எந்தப் போரையும் நடத்தவும் இல்லை, ஆதரிக்கவும் இல்லை என்ற உண்மையை நினைவூட்டி, பைடனுக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை தீவிரமடைய வைத்து வருகின்றார்.

காசாவில் இஸ்ரேல் பண்ணும் அட்டூழியங்களுக்காக, அந்த இஸ்ரேலின் சியோனிச ஆட்சிப் பீடத்திற்கு முட்டுக் கொடுக்கும் அமெரிக்க அரசு, அதற்காக, தனது மக்களிடமே முதலில் பாடம் படிக்கப் போகின்றது என்றுதான் தோன்றுகின்றது.

# பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகளை பிலிப்பைன்ஸுக்கு வழங்கியது இந்தியா




இந்தியாவில் இருந்து பிலிப்பைன்ஸுக்கு பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் வழங்குவது தொடரும் என்று இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர் .

375 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான ஒப்பந்தத்தின் கீழ் இந்த ஏவுகணை வழங்கப்படும் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இந்த ஏவுகணை அமைப்பு சமீபத்தில் இந்தியாவில் இருந்து சிறப்பு சரக்கு விமானம் மூலம் பிலிப்பைன்ஸின் மணிலாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் இடையேயான ஏவுகணை ஒப்பந்தத்தின் முதல் படியாக இது செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் 2022 இல் கையெழுத்தாகியுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் ஏவுகணை இறக்குமதியானது, தென் சீனக் கடலில், சர்வதேச கவனத்தை ஈர்த்து, சீனாவுடன் அரசியல் பதட்டங்கள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவொரு அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள பிலிப்பைன்ஸ் தனது கடலோரப் பகுதிகளில் ஏவுகணை அமைப்பை நிறுவும் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தமிழகத்தில் இன்று முதல் 4 நாள்களுக்கு வெப்ப அலை




தமிழகத்தில் நாளை முதல் 4 நாள்களுக்கு வெப்ப அலை வீசும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், புதுச்சேரி, கர்நாடகா, கேரளா, பீகார், உத்தர பிரதேசம், தெலுங்கானா, கோவா ஆகிய மாநிலங்களில் வெப்ப அலை வீசும் என அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

"தமிழகம் முழுவதும் கோடை வெயில் சுட்டெரிக்க ஆரம்பித்துள்ள நிலையில், இந்த ஆண்டு வழக்கத்தை விட வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். அடிக்கடி வெப்ப அலை வீசும்.

நாளாந்தம் வெயிலின் உக்கிரம் அதிகரித்து வருகிறது. அதிகரிக்கும் வெப்ப நிலை காரணமாக பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.

இதனால், பகல் நேரங்களில் சுட்டெரிக்கும் வெயிலால் வெளியே செல்ல முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

தமிழகத்தின் சில பகுதிகளில் இன்று வெப்ப அலை வீசும். இந்த வெப்ப அலை மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசாவிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்துடன், தமிழகத்தில் சில பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்குகளில், காற்றின் திசை மாறுபடும். இதன் காரணமாக தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் 5 நாள்களுக்கு வறண்ட வானிலை நிலவக்கூடும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் மே மாதம் 1 ஆம் திகதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

மற்ற தமிழக மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்." என எச்சரிக்கப்பட்டுள்ளது.

# செங்கடலில் தொடரும் பதற்றம்: பிரிட்டன் கப்பல் மீது தாக்குதல்



செங்கடல் வழியாக சென்ற "ஆண்ட்ரோமேடா ஸ்டார்" என்ற பிரிட்டன் எண்ணெய் கப்பல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹவுதி இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் யாஹ்யா சரேயா அறிவித்துள்ளார்.

இந்த தாக்குதலானது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டமையை அமெரிக்க இராணுவம் நேற்று உறுதி செய்துள்ளது.

இதன்படி பிரிட்டனுக்கு சொந்தமான "ஆண்ட்ரோமேடா ஸ்டார்" கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 3 பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் இந்த தாக்குதலில் கப்பலுக்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அமெரிக்க இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையிலான போரில் ஏமன் நாட்டைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்தனர்.

அதன் எதிரொலியாக செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் ஆதரவு நாடுகளில் இருந்து வரும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியட்நாம் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவி விலகினார்



வியட்நாம் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் வூங் டின் ஹியூ நேற்று பதவி விலகியுள்ளார்.

ஊழல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை கருத்தில் கொண்டு, தாமாகவே அந்த பதவியில் இருந்து விலக 67 வயதுடைய வூங் டின் ஹியூ தீர்மானித்துள்ளார்.

வியட்நாம் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவி விலகியுள்ளமை அந்த நாட்டின் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வியட்நாம் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் வூங் டின் ஹியூ மீது அதிகார துஷ்பிரயோகம், ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இதற்கிடையே, அவரது உதவியாளர் பாம் தாய் ஹா, ஊழல் குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், தற்போது வூங் டின் ஹியூ தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து சுமார் 1,000 கிலோ மீற்றர் தொலைவில் போனின் தீவுகள் அல்லது ஒகாசவரா தீவுகளின் வடக்கு கடற்கரை பகுதியில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 6.9 ஆக பதிவாகியுள்ளதாக அந்த நாட்டின் தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட அதிர்வு மத்திய டோக்கியோ வரை உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக இதுவரை சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




# வீதிக்கு வந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் 34 ஆவது நாளாக கல்முனையில் கவனயீர்ப்பு

(கஜனா சந்திரபோஸ்)

பல்வேறு சட்டவிரோத நடவடிக்கையை அம்பாறை மாவட்ட செயலகமும் உள்நாட்டு அலுவலக அமைச்சும் அனுமதித்து வருகின்ற நிலையில் 34 ஆவது நாளாக கல்முனை வடக்கு பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களினால் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன் எடுக்கப்பட்டது.

இந்த வெளிக்கள உத்தியோகத்தர்கள் தங்கள் சுய விடுமுறையில் நேற்றைய தினம் காலை 8.30 மணி அளவில் பிரதேச செயலகத்தில் இருந்து ஊர்வலமாக ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து கல்முனை பிரதான வீதி வழியாக சென்று பொலிஸ் நிலைய பாதை வழியாக மீண்டும் பிரதேச செயலகத்தை வந்தடைந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிதி நடவடிக்கைகள் கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தினால் கையாளப்படுகின்ற நிலையில் கணக்காளர் பதவிக்கான ஆளணி அனுமதிக்கப்பட்டிருந்தும் அப்பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை இதுவரை மாவட்ட செயலகமும் உள்நாட்டலுவல்கள் அமைச்சும் மேற்கொள்ளவில்லை.

சுமார் 300க்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தினால் நியமிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பிரதான பதவியான பிரதேச செயலாளர் இதுவரை நியமிக்கப்படவில்லை. அம்பாறை மாவட்ட செயலகமும் உள்நாட்டல்கள் அமைச்சும் இந்தப் பாரிய நிர்வாக தவறுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் என்ற அடிப்படையில் 33 நாள்களாக பொதுமக்கள் போராடிய நிலையில் எந்தவிதமான தீர்வும் இதுவரை கிட்டாத சூழலில் அந்தப் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்களினால் நேற்று இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது















# வாழ்நாளில் பயணம் செய்ய வேண்டிய உலக நாடுகள் வரிசையில் இலங்கை

வாழ்நாளில் பயணம் செய்ய வேண்டிய உலக நாடுகளின் வரிசையில் இலங்கை ஐந்தாவது இடத்தில் பெயரிடப்பட்டுள்ளது.

நியூயோர்க்கை தளமாகக் கொண்ட CEOWORLD சஞ்சிகை வெளியிட்டுள்ள, 2024ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச பயணிகளை வசீகரிக்கும் இலங்கையின் பல்வேறு சலுகைகள் மற்றும் தனித்துவமான அனுபவங்களை இந்த தரப்படுத்தல் வெளிக்காட்டுவதாக அந்தச் சஞ்சிகை சுட்டிக் காட்டியுள்ளது.

உலகின் மிகச்சிறந்த சுற்றுலா நாடுகளில் ஒன்றாக இலங்கை தொடர்ந்து பதிவாகி வருகின்றது.

2,95,000 இற்கும் மேற்பட்ட வாசகர்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இந்த தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மலைநாடு, ஆயுர்வேத சிகிச்சை, ரயில் பயணங்கள், தேயிலைத் தோட்டங்கள் உள்ளிட்ட சுற்றுலா இடங்கள் பயணிகளுக்கு பரந்த அளவிலான அனுபவங்களை வழங்குகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கலாசாரம் மற்றும் பண்பாட்டு மரபுகள் நிறைந்த நாடாக இலங்கை அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆரோக்கியமான காலை உணவு என்பனவும் இலங்கையின் தனித்துவமான சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரத்தினங்கள், தேநீர், கைத்தறி துணிகள், தோல் பொருள்கள், பழங்கள், நகைகள் மற்றும் மட்பாண்டங்கள் போன்றனவும் இலங்கையின் சிறப்புகளாக CEOWORLD சஞ்சிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# 35 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல்

## 5 சந்தேகநபர்கள் கைது

பியகம மற்றும் மஹரகம ஆகிய பகுதிகளில் சுமார் 35 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பியகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்றுமுன்தினம் இரவு பண்டாரவத்த பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றைச் சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, 15 கிலோகிராம் 81 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 14 கிலோகிராம் 527 மில்லிகிராம் ஹேஷ் ரக போதைப்பொருள் மற்றும் 941 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிளில் இருந்த கடுவலை - பொமிரிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம் அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட மற்றொரு சோதனையில் போதைப்பொருட்களுடன் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

7 கிராம் 620 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 2 சந்தேகநபர்களும், 220 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப் பொருளுடன் மற்றுமொரு சந்தேகநபரும் இந்தச் சோதனையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 31 மற்றும் 40 வயதுகளுக்கு இடைப்பட்ட கடுவலை, அரலகங்வில மற்றும் சியம்பலாபே ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மஹரகம - நாவின்ன பகுதியில் 8 கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் ரக போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 45 வயதுடைய நபர் எனவும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி சுமார் 16 கோடி ரூபா எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# அடுத்த தவணைக் கடனை ஜூ னில் சர்வதேச நாணய நிதியம் வழங்கும்



சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணைக் கடன் ஜூன் மாதத்தில் நாட்டிற்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அடுத்த கடன் தவணைக்குரிய இரண்டாவது கடன் மீளாய்வை இலங்கை நிறைவு செய்துள்ளது.

அந்த மீளாய்வின் அடிப்படையில், ஊழியர் மட்ட இணக்கப் பாடு ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிறைவேற்றுக் குழுவின் இணக்கப்பாடு வழங்கப்படாதுள்ளது.

அந்த இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்கு முழுமைப் படுத்தப்பட வேண்டிய நிபந்தனைகள் சில காணப்படுகின்றன.

சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டை ஒப்பந்தமாக மாற்று வது இதில் முக்கியமான நிபந்தனையாகும்.

சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் இணக்கப் பாட்டை ஏற்படுத்திக்கொள்வது மற்றைய நிபந்தனையாகக் காணப்படுகின்றது.

இதற்கமைய, சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பேச்சுவார்த்தையில் அடை யாளங்காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இரண்டா வது பேச்சுவார்த்தையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள் ளது.

அத்துடன், சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உயர்ந்தபட்ச வெளிப்படைத் தன்மையுடன் இலங்கை அர சாங்கம் செயற்பட்டு வருகின்றது.” – என்றார்.

# இலங்கையில் இருந்து விடுதலையான 24 தமிழக மீனவர்கள் நாடு திரும்பினர்



இலங்கைச் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட 24 தமிழக மீனவர்கள் சென்னை விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் ராமநாதபுரம் – மண்டபம் பகுதியை சேர்ந்த 24 மீனவர்கள் மார்ச் மாதம் 21 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி 24 மீனவர்களும் இம்மாதம் 4 ஆம் திகதி யாழ். ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத் தண்டனை என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்ட னர்.

இந்த நிலையில், மீனவர்கள் தொடர்பான மேலதிக பரிசோ தனைகள் மற்றும் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டதை யடுத்து, 24 மீனவர்களும் சென்னை விமான நிலை யத்தை நேற்று முன்தினம் சென்றடைந்தனர்.

# தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது




தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் பாரியளவு ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் அந்த அலுவ லகத்தின் செற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 400 பேர் இருக்க வேண்டிய நிலையில், தற்போது 1,400 அதிகாரிகள் மாத்திரம் இருக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறைக் காரணமாக கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்க கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி விக்ரமரத்ன கருத்து தெரிவிக்கையில் –

கணக்காய்வாளர்கள் பற்றாக்குறையினால் கணக்காய்வு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன எனவும், இதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

அத்துடன், 165 கணக்காய்வு அத்தியட்சகர்கள் மற்றும் 465 கணக்காய்வு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளவுள்ளனர் எனவும், கணக்காய்வாளர் வெற்றி டங்களுக்கு சுமார் 600 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# சவூதி அரேபியாவுக்கு நியமனமாகவுள்ள இலங்கைப் புதிய தூதருக்குக் கௌரவம்



(எம். எப். றிபாஸ்)

சவூதி அரேபியாவுக்கான இலங்கையின் புதிய தூதராகப் பதவி ஏற்கவுள்ள சட்டத்தரணி அஷ் ஷெய்க் அமீர் அஜ்வாடைக் கௌரவிக்கும் நிகழ்வு ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் கொழும்பு இந்தியன் சமர் டிரெஸ்டோரண்டில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும், மூத்த ஊடகவியலாளருமான என்.எம். அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் போரத்தின் செயற்குழு உறுப்பினர்களான ஊடகவியலாளர்கள், ஒலி, ஒளிபரப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஊடகம் மற்றும் கலாச்சரம் சார்ந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் இரு நாட்டுத் தொடர்புகளை விஸ்தரிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர் காலத்தில் ஊடக செயற்பாட்டாளர்களுக்கான பல்வேறு நலன் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் தூதுவரிடம் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், போரத்தின் செயற்குழு உறுப்பினர்களால் குறித்துக் காட்டப்பட்ட சில சமூக நலத்திட்டங்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

இவர் எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதியளவில் சவூதி அரேபியாவுக்கான இலங்கையின் புதிய தூதவராக பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்க 230 புனர்வாழ்வு நிலையங்கள்



நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 230 புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் புனர்வாழ்வு நிலையங்களின் சேவைகள் எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் சட்டத்தரணி ஷக்ய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் போதை மாத்திரைகளை பயன்படுத்தும் போக்கு அதிகரித்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி காவல்துறை மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நச்சுத்தன்மை வாய்ந்த போதைப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு போதை மாத்திரைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 3 லட்சத்து 63 ஆயிரத்து 438 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.





# தமிழரசு இனி எப்போது மீண்டெழும்?

இலங்கைத் தமிழரசுக் கட்சியை மறுசீரமைப்புச் செய்யப் புறப்பட்டவர்கள் இன்றைக்கு நீதிமன்றங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சியொன்று தன்னுடைய பொறுப்பை மறந்து, தனியாவர்த்தனமும் சுயநல ஆட்டமும் ஆட முயன்றதன் விளைவை இப்போது சந்தித்து நின்கின்றது. தேசிய விடுதலையை வேண்டி நிற்கும் சனக்கூட்டத்தின் அரசியலை முன்னெடுக்கும் தரப்பினர், தங்களுக்குள் பதவிகளுக்காக முட்டி மோதும் போது, அந்தச் சனக் கூட்டத்தின் விடுதலை இலக்குகள் சிதைக்கப்படுகின்றன. அப்படியானதொரு நிலையை, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தாய்க்கட்சி என்று சொல்லக்கூடிய தமிழரசுக் கட்சி இப்போது நிகழ்த்திக் கொண்டிருக்கின்றது. அந்தக் கட்சியிடம் எதிர்கால அரசியல் திட்டங்கள் ஏதும் இல்லை. வாக்கு அரசியலின் கட்சியாகத் தன்னைச் சுருக்கிக் கொள்ளும் செயற்பாடுகள் மட்டுமே காணப்படுகின்றன.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு, மத்திய செயற்குழு தெரிவு மற்றும் தேசிய மாநாடு தொடர்பில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு, அடுத்த தவணைக்காக எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திகதியில் கூட வழக்கு, விசாரணை எனும் கட்டத்தை அடையுமா என்பது தெரியவில்லை. ஏற்கனவே, எதிராளிகள் தங்களின் சமர்ப்பணங்களை மூன்று நிலைப்பாடுகளில் நின்று வழங்கியிருக்கிறார்கள் என்று கொள்ள முடியும். அதுபோல, இடையீட்டு எதிராளியாக தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த சின்னையா இரட்ணவடிவேல் இணைந்து கொண்டிருக்கிறார். அடுத்த வழக்குத் தவணையில் புதிய இடையீட்டு எதிராளிகளும் இணைந்து கொள்ளும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அப்படியான நிலையில், வழக்கு விசாரணைகள் இப்போதைக்கு முடிவுக்கு வரும் சாத்தியங்கள் குறைவு. அதிலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தலுக்கு முன்னர் வழக்கு முடிவுக்கு வந்து, கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் சாத்தியமாகும் வாய்ப்புக்கள் இல்லை.

ஒரு கட்சியாக தமிழரசுக் கட்சி, தன்னுடைய யாப்பு விதிகளை முறையாக பேணி வந்திருக்கவில்லை. அதுபோல, காலத்துக்கு ஏற்ப யாப்பு விதிகளில் மாற்றங்களைச் செய்து, அதற்கான பொதுக்குழு அங்கீகாரத்தையும் பெரிதாக பெற்றிருக்க வில்லை. அவற்றையெல்லாம் தாண்டி, கட்சியின் யாப்புத் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொடங்கி, அநேகருக்கு எந்தத் தெளிவும் இல்லை. மக்கள் அரசியலில் ஈடுபடும் அமைப் பொன்று, சில அவசர தருணங்களில் யாப்பு விதிகளைத் தாண்டிய தீர்மானங்களை (காலத்துக்கு ஏற்ப) எடுக்க வேண்டி வரலாம். அவை, புரிந்து கொள்ளப்படக் கூடியது. ஆனால், அதனையே, தொடர் பழக்கமாக மாற்றுவது என்பது, தவறுகளை தட்டிக் கழித்துச் செயற்படும் நிலையாகும். அப்படியான சிக்கலுக்குள்தான் இப்போது மீள முடியாத வகையில் தமிழரசுக் கட்சி மாட்டியிருக்கின்றது. புதிய தலைவர் தெரிவின் போது, மேலதிகமாக 14 உறுப்பினர்களை, கட்சித் தலைவர் என்ற நிலையில் தனக்கு இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு மாவை, வாக்களித்த வைத்திருக்கின்றார். அதனை, தலைவர் தேர்தலில் போட்டியிட்ட சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் ஏற்றுக்கொண்டும் அனுமதித்திருக்கிறார்கள். கட்சியை மறுசீரமைப்புச் செய்யப் புறப்பட்டவர்கள், தலைவர் தேர்தலுக்கான வாக்களிப்பின் போதே, இவ்வாறானா இடையீட்டு நபர்கள் வாக்களிக்க அனுமதித்தது என்பது, ஏற்றுக் கொள்ள முடியாதது. அது, ஏற்கனவே, யாப்பு விதிக ளுக்கு முரணான கட்சி நிகழ்த்தி வந்த செயற்பாடுகளை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதாகும். அப்படியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்கள், எப்படி கட்சி மறுசீரமைப்புக்கான உரிமையைக் கோர முடியும்?



புருஜோத்தமன் தங்கமயில்

யாப்பு விதிமுறைகளுக்கு முரணான மேலதிகமாக வாக்களித்த 14 பேர், தொடர்பிலான விடயத்தை எப்படியும் திருத்த முடியாது. எந்த நீதிமன்றத்திலும் அதனை, ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். இப்போதும் அதுதான் நிகழ்ந்திருக்கின்றது. தவறை நிகழ்த்திய மாவையும், அதனை அங்கீகரித்து செயற்பட்டவர்களும் இப்போது நீதிமன்றத்தில் அந்தத் தவறை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் என்பது களத்தினைப் புரிந்து கொண்டு ஆடும் ஆட்டம்தான், சிலவேளை விதிகளைக் கடந்து நின்றும் ஆட வேண்டி வரலாம். ஆனால், விதிகளை மீறி நின்று ஆடுவதுதான் அரசியலின் அடிப்படை என்ற கற்பிதம், தொடருமானால் அது மக்களினால் நிராகரிக்கப்பட நேரிடலாம்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவின் மேலதிகமாக 14 பேர் வாக்களித்தமை தவறு என்பது இனித் திருத்த முடியாதது. அதுபோல, பொழுக்குழுவின் அங்கீகாரம் பெற்ற மத்திய செயற்குழுத் தெரிவை, கட்சிக்

தொடர்ச்சி▼

# தமிழரசு இனி எப்போது மீண்டெழும்?

தொடர்ச்சி▲

கட்டமைப்புக்கு வெளியில் நின்று மாற்றியமைக்க முற்பட்டமை என்பதும் அடிப்படை அரசியல் மரபுகளுக்கே முரணானது. குறிப்பாக, பொதுச் செயலாளர் தெரிவு, பொதுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. அதனை, ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று ஒருசிலர் குழப்பம் விளைவித்தமைக்கு இணங்கி, பொதுக்குழு தீர்மானத்தை மாற்றுதல் என்பது, ஜனநாயக விரோதமானது. அந்த விடயமே, தமிழரசுக் கட்சி எதிர்கொண்டிருக்கும் வழக்குகளுக்கு அடிப்படைக் காரணம். பொதுக்குழு தீர்மானங்களை வெளியில் மாற்ற முற்பட்டமை தொடர்பில் தலைவராக தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சிறீதரனோ, அவரது அணியினரோ இப்போது பேசத் தயாராக இல்லை. தலைவர் தெரிவு, மத்திய செயற்குழு தெரிவு மற்றும் தேசிய மாநாடு தொடர்பில் தொடரப்பட்ட வழக்குகளில் ஓர் ஒழுங்குண்டு. அவை, நீதிமன்றத்துக்கு வெளியில் தீர்வைக் காணக் கூடிய நிலையில் இருந்தவை. அதாவது, பொதுக்குழு அங்கீகரித்த விடயங்களை முழுமையாக அமுல்படுத்தி செயற்பட்டிருக்க வேண்டியது. அப்படி நிகழ்ந்திருந்தால், வழக்குகள் தொடரப்படும் வாய்ப்புக்கள் இல்லை. அதனை சீறிதரனும் அவரிடம் பொதுச் செயலாளர் பதவிக்காக அழுத்தங்களைப் பிரயோகித்தவர்களும் ஏற்கிறார்கள் இல்லை.

கட்சிக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டமையை ஏற்க முடியாது என்று சிறீதரன் ஏற்கனவே அறிவித்திருக்கின்றார். அத்தோடு, தமிழர் விடுதலைக்காக போராடும் தரப்பு 'சிறீலங்கா' நீதிமன்றங்களில் கட்சியை நிறுத்தி நீதியைக் கோருவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அண்மைய செவ்வியொன்றில் அவர் கூறியிருக்கின்றார். ஆனால், சிறீதரன் என்ன நம்பிக்கையில், குருந்தூர் மலை ஆதிசிவன் ஐய்யனர் ஆலயம் தொடர்பிலான அடிப்படை மனித உரிமை வழக்கொன்றில் வழக்காளியாக இருக்கிறார்? அவருக்கு சிறீலங்காவின் நீதித்துறையில் நம்பிக்கையில்லை என்றால், எந்த அடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண் SC FR 186/2021) வழக்கைத் தொடுத்திருக்கிறார்? 'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்கும்' என்பது அனுபவமொழி. அப்படியான நிலையாகத்தான் சிறீதரனின் சிறீலங்கா நீதிமன்றங்கள் தொடர்பிலான நிலைப்பாட்டைக் கொள்ள வேண்டும்.

சிறீதரன் தனக்கு என்று வந்ததும் பதறுவது போலவே, இப்போது சுமந்திரனும் புலம்பெயர் பெரும் வர்த்தகர்கள் தொடர்பில் புலம்புகிறார். தமிழ்த் தேசிய அரசியலில் இருந்து புலம்பெயர் வர்த்தகர்கள் ஒதுங்கியிருக்க வேண்டும் என்று அண்மைய செவ்வியொன்றின் போது, சுமந்திரன் கூறியிருக்கிறார். விடுதலை வேண்டி போராடும் சனக்கூட்டத்தின் அரசியல் சமூக தரப்புக்கள், கள நிலையை உள்வாங்கி செயற்பட வேண்டும். அதற்கு இசைவான வெளித்தரப்புக்களை இணைத் தரப்புக்களாக கொண்டு செயற்பட முடியும். அதாவது, தாயகத்தின் அரசியலை சரியாக உள்வாங்கி, அதற்கு ஒத்துழைப்பு வழக்கும் புலம்பெயர் தரப்புக்களோடு இணைந்து செயற்பட வேண்டும். ஆனால், தீர்மானங்களை தாயகமே எடுக்க வேண்டும். ஆனால், முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான தமிழர் அரசியலை புலம்பெயர் தேசத்திலுள்ள பல தரப்புக்களும்



ஆக்கிரமிக்க முயற்சிக்கின்றன. தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தாயகம் மக்கள் செயற்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு. அவை, நிராகரிக்கப்படும்போது புலம்பெயர் நிகழ்ச்சி நிரலாளர்கள் ஆத்திரப்படுகிறார்கள். அவர்களின் அடுத்த தெரிவு, கட்சிகளுக்குள்ளும் அமைப்புக்களுக்குள்ளும் முக்கியஸ்தர்களை தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு பிரதிபலிக்கும் நபர்களாக மாற்றுவது. அதனூடாக கட்சிகளுக்குள்ளும் அமைப்புக்களுக்குள்ளும் தங்களின் தீர்மானங்களைப் புகுத்துதல். இந்த நிலை தமிழரசுக் கட்சி தொடங்கி, தமிழத் தேசிய அரசியலில் இருக்கும் கட்சிகள் அமைப்புக்கள் பலவற்றுக்குள்ளும் உண்டு. இந்த விடயத்தை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு, சரி செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், புலம்பெயர் பண முதலமைகள் மாத்திரமல்ல, தென் இலங்கை அரசியல் அதிகார சக்திகளும் தமிழ் தேசிய அரசியலை தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்க ஆட்டுவிக்கும். அந்த அச்ச நிலையை காலங்கடந்து சுமந்திரன், இப்போது வெளிப்படுத்தி இருப்பதை எப்படி நோக்குவது?

விடுதலைக்கான கட்சியாக முன்னிறுத்தும் எந்தவொரு கட்சியும் நிகழ்வுகளுக்கு பிரதிபலித்தல் என்ற நிலைக்குள் தேங்கிக் கொள்ள முடியாது. அப்படி தேங்கிவிட்டால் அந்தக் கட்சிக்கான எதிர்காலம் இருக்காது. தமிழரசுக் கட்சி அப்படியானதொரு நிலைக்குள்தான் இருந்து வருகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான நீதி கோரல் என்ற விடயங்களை முன்னுக்கு வைத்துக் கொண்டாலும், அவை தொடர்பிலான செயற்பாடுகளில் தமிழரசுக் கட்சியிடம் அர்ப்பணிப்பு என்பது கிடையாது. மாறாக, ஏதாவது செய்தாக வேண்டும் என்பதற்காகத்தான் பெரும்பாலும் போராட்டங்கள் என்ற பெயரில் மக்கள் பங்களிக்காத கூடிக் கலைதல்களைச் செய்து வருகின்றது. இன்றைக்கு அரசியல் போராட்டங்களை நோக்கி மக்களை அழைத்து வரும் ஆற்றல் எந்தக் கட்சிக்கும் இல்லை. குறிப்பாக, தமிழரசுக் கட்சிக்கு இல்லை. ஏனெனில் அந்தக் கட்சி தனக்குள்ளேயே பல கூறுகளாக பிளவுண்டு கிடக்கின்றது. அந்தப் பிளவுகள் பெரும்பாலும் பதவி பகட்டுக்காக மாத்திரமே நிகழ்ந்திருக்கின்றன. இந்த பிளவுகளைப் பிடித்துக் கொண்டு வெளித்தரப்புக்கள் மிக இலகுவாக தமிழரசுக் கட்சியை கையாள்கின்றன. அது, அந்தக் கட்சிக்கு மாத்திரமல்ல, தமிழ் மக்களுக்கும் பெரும் பின்னடைவாகும். இந்தக் கட்டத்தில் இருந்து மீள்வதற்கு அந்தக் கட்சிக்காரர்கள், மனதளவில் தயாராக வேண்டும். இல்லையென்றால், தமிழர் விடுதலைக் கூட்டணி இன்று இருக்கும் நிலைக்கு, தமிழரசுக் கட்சி சென்று சேருவதற்கு நீண்ட காலமாகாது.



# தமிழரசின் எதிர்காலம்


வி.எஸ்.சிவகரன்

கடந்த இருபது ஆண்டுகளாக தமிழ் வாக்காளர்கள் மத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத்திய வீட்டு சின்னம் இன்று திரிசங்கு நிலையில் உள்ளது.

இந்தச் சின்னத்திற்கு இரட்டை மதிப்பு விடுதலைப் புலிகளின் ஒப்புதலுடன் வாக்காளர் மத்தியில் அறிமுகமான சின்னம் என்பதுதான். அதனாலேயேதான் அதிகமான தமிழ் மக்கள் அதற்கு வாக்களிக்கும் நிலைமை காணப்பட்டது. கட்சியின் தலைவர்கள், பிரமுகர்களின் தவறுகள், செயலற்ற நிலை ஆகியன இருந்தும் – பொருத்தமற்ற, தகுதியற்ற – வேட்பாளர்கள் கூட வெற்றி பெறும் நிலை காணப்பட்டது. அதை இலாவகமாகப் பயன்படுத்திய பலர் முன் கதவாலும் பின்கதவாலும் உள் நுழைந்தனர். இன்னும் சிலர் நுழைவதற்குக் காத்திருக்கின்றனர். எந்த வலியும் இல்லாமல் அதிகாரத்தை சுவைப்பதற்கு மிக இலகுவான இடமாக கட்சியைப் பலரும் தெரிவு செய்தனர். மாற்றுக் கட்சிகளில் வெற்றி பெற முடியாதவர்கள் கூட நாடி வந்தனர். ஒரு கட்டத்தில் கொள்கை, கோட்பாடு, இலட்சியம், தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் எல்லாம் மறந்து கோட்பாடற்றவர்களின் கூடாரமாக மாறிவிட்டது.

போதாக்குறைக்கு மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவமும் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளதால் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறிக் கொண்டிருக்கிறது கட்சி.

ஆகவே 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவர்கள் மீதான நம்பிக்கை தமிழ் மக்களுக்குக் குறையவே ஆரம்பித்திருக்கிறது. அதன் நீட்சிதான் இன்றைய பரிதாப நிலையும், தொடர் தேர்தல் வீழ்ச்சியும். இந்த நிலை தொடர்ந்தால் எதிர்கால தேர்தல்களில் மிகப்பெரிய வீழ்ச்சி ஏற்படலாம்.

எனவே வழக்கிலிருந்து இலகுவாக மீள்வதற்குரிய வழியைக் காணாமல் மூன்று பிரிவுகளாக இருந்து தமது வாதங்களை முன் வைப்பது மிகப் பெரிய முட்டாள்தனம். ஏழு பக்க யாப்பை புரிந்து கொள்ள முடியாதவர்கள் ஜனாதிபதி சட்டத்தரணியாகவும், மூத்த அரசியல்வாதியாக இருப்பதிலும், பல வருட நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தொடர்வதிலும் எந்த அர்த்தமும் இல்லை.

கட்சியின் அரசியல் குழு எடுத்த தீர்மானம் மிகத் தவறானது. கட்சியின் எதிர்காலம் தொடர்பாக நின்று, நிதானித்து, அவதானித்து, சிந்திப்பதை விடுத்து, உணர்ச்சிவசப்பட்டு, எழுமாறாக, முதிர்ச்சியற்ற தீர்மானம் எடுப்பது எழுபது ஆண்டுகளைக் கடந்த கட்சியை எள்ளி நகையாடும் விடயமாகும். குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போல் ஆகிவிட்டது விவகாரம்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தன்னைச் சுற்றி சூழ்ச்சி செய்யப்படுதாகக் கூறுகிறார். இது மிகவும் வேடிக்கையான சிறுபிள்ளைத்தனமான வார்த்தை.

அரசியல் என்பதே சூழ்ச்சிதான். தான் செய்வதும் சூழ்ச்சி அரசியல்தான் என்பதை அவர் மறந்து விட்டாரா? சூழ்ச்சி இல்லாமல் தேர்தல் அரசியலில் தாக்குப் பிடிக்க முடியுமா? தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்குரிய யுக்தியாக பயன்படுத்தியதே தமிழ்த் தேசியம் எனும் வாதம்தானே..?

இந்த உலகத்தில் சூழ்ச்சி செய்யாத – சூழ்ச்சி தெரியாத – எந்த அரசி யல்வாதியுமே அரசியலில் நின்று நிலைத்தனர் எனச் சரித்திரமில்லை. இலக்கியங்கள் புராணங்களில் இல் லாத சூழ்ச்சியா? இது எல்லாம் அறிந்து உணர வேண் டும். வலியில்லாமல் பதவிக்கு வந்ததன் விளைவுதான் சிறிதரனின் சூழ்ச்சி வாசகம்.

ஓர் அரசியல் கட்சியில் அங்கத்தவனாகச் சேர்ந்து, நோட்டீஸ் ஒட்டுவதில் தொடங்கி, படிப்படியாக வளர்ந்து வந்தால்தான் அதன் உழைப்பு புரியும். அது இல்லாமல் அடிப்படை அங்கத்தவரேயாக முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக ஆகுவது கூட்டமைப்பில் மட்டுமே.

தமிழ் தேசியம் என்னும் மாயவித்தை சொல்லாடல் பதவி சுகம் கொடுப்பதால் இலகுவாக இலக்கை எட்டிவிடுகின்றனர். அதனால்தான் இந்த சூழ்ச்சிகளை அறிந்து உணர்ந்து கொள்ள முடியவில்லைப் போலும்.

எனவே யாவரையும் அரவணைத்து, ஒருங்கிணைத்துச் செல்லும் வழிமுறையை கடைபிடிக்க வேண்டும். ஏட்டிக்குப் போட்டியாக எதிர்வாதம் செய்வதில் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை. அப்படிச் செய்வதில் தான் நேசிப்பதாகக் கூறும் தமிழ்த் தேசியத்திற்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ அல்லது அவருக்கோ (சிறிதரனுக்கோ) எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

பகைமையை மறந்து, சினம் கொள்வதைத் தவிர்த்து, 'துரோகி', 'தியாகி' பட்டம் கொடுப்பதை நிறுத்தி, நிதானித்து, அறிவார்ந்து நோக்கு நிலையில், எதிர்கால இருப்புப் பற்றி விருப்பு வெறுப்பு இன்றி ஆராய்ந்து,

தொடர்ச்சி▼



# தமிழரசின் எதிர்காலம்

**தொடர்ச்சி▲**

அறிந்து, தெளிந்து, கூட்டுப் பொறுப்புடன், அணிகளற்று முன்னோக்கி நகர்வதற்குரிய வழி வரைபடத்தை உருவாக்க வேண்டியதே காலத்தின் கட்டாயமும், சிறிதரன் மேல் காலம் சுமத்தியுள்ள பெரும் பொறுப்புமாகும்.

தவறுகளையும் கடந்த காலத்தையும் பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் எவரையும் நேசிக்கவும் முடியாது, எதுவும் சாதிக்கவும் முடியாது, எதையும் வெற்றி கொள்ளவும் முடியாது.

ஆகவே, உடனடியாகக் கட்சியின் மத்திய குழுவைக் கூட்டி, முரண்பாடுகள் அற்ற சமன்பாடுகளில் கட்சியை நகர்த்துவதற்கு என்ன வழி என்பதை மட்டும் ஆராய்ந்து, தீர்க்கமான ஒரு கூட்டு முடிவுக்கு வருவதே ஒரே வழியும் அறிவார்ந்த தலைமைக்குரிய அடையாளமும் ஆகும்.

எத்தனை ஜனாதிபதி சட்டத்தரணிகளை வைத்து நீதிமன்றத்தில் வாதாடினாலும், கட்சியின் நலனுக்கு எந்த விதமான பயனும் கிடைக்கப் போவது இல்லை. தீரப் போவதுமில்லை. காலநீட்சியே ஏற்படும். காலம் கடக்கக் கடக்க, ஆதரவாளர்கள், தொண்டர்கள், வாக்காளர்கள் மனச்சோர்வு ஏற்பட்டு மாற்றுக் கட்சிகளை நாடி விடக்கூடிய மிகப்பெரிய ஆபத்து உண்டு.

வறட்டு வாதங்களாலும், நேற்றைய பகைமைகளாலும் பொது வாழ்வில் எதனையும் சாதிக்க முடியாது என்று உணருங்கள்.

பகைமை பாராட்டி காலத்தை இழுபட விடுவது, மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ள இன விடுதலை அரசியலை மேலும் வலிமையற்ற நிலைக்கு இட்டுச் செல்லும் செயலாகவே அமையும். கட்சியின் எதிர்கால இருப்புக்கு அது உகந்தது அல்ல.

ஜனநாயகத்தைக் காக்கவும் மக்களாட்சித் தத்துவத்தை போற்றவும் நாட்டில் அரசியல் கட்சிகள் மிகவும் அவசியமானவை. இதை உணர்ந்து செயலாற்றாவிட்டால் தலைவர்கள் யாவரும் காலத்தால் காணாமல் போய்விடுவார்கள்.

ஆகவே இன விடுதலை அரசியலில் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போகிறீர்களா அல்லது உங்களுக்குள் தொடர்ந்து வழக்காடு மன்றங்களுக்குள் கட்சி வாதங்களை முன்னெடுத்து காலத்தை வீணடிக்க போகிறீர்களா என மக்கள் உங்களை நோக்கி கேள்வி எழுப்புகிறார்கள்.

நீங்கள் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்குறீர்கள்...!

# வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மே 1 முதல் பணிப் புறக்கணிப்பு முஸ்தீபு

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் அச் சங்கத்தினர் நேற்று நடாத்திய ஊடக சந்திப்பின் போதே சங்கத்தின் தலைவர் விஜயராசா விஜயரூபன் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாங்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன்வைத்து இருக்கின்றோம். ஆனாலும் அவற்றுக்கான தீர்வுகள் எவையும் இதுவரையில் முன்வைக்கப்படாத நிலைமையே காணப்படுகிறது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் பல்வேறு தொழிற்சங்கங்களும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை முன்னெடுத்த போது அதற்கான தீர்வுகள் சில எட்டப்பட்டு இருக்கின்றன.

ஆனால் எமக்கான தீர்வு ஏதும் எட்டப்படாத நிலையில் நாம் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம். இதற்கமைய எமது கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முதல்




பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

இதனடிப்படையில் நமது கோரிக்கைகளை அரசு ஏற்காவிடின் வடக்கு மாகாணம் முழுவதும் மே முதலாம் திகதியில் இருந்து அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளில் இருந்து ஒதுங்கி பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள உள்ளோம்.

எனவே எமது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுகிற பொறிமுறையை வடக்கு மாகாணத்திலும் பின்பற்ற வேண்டும் அல்லது நடைமுறைப் படுத்த வேண்டும் எனக் கோருகிறோம். – என்றார்.




# ‘வல்லமை’ - இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரில் நேற்று கலந்துரையாடல்

‘வல்லமை’ – சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் சமகால சமூக அரசியல் பொருளாதார சூழலை விளக்கி கொள்ளுதல் என்ற தலைப்பில் கலந்துரையாடல் தொடர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி சுவஸ்திகா, சட்டத்தரணி இளங்கோவன், பவ்ரல் அமைப்பு – மாவட்ட இணைப்பாளர் சசிகாந்த் மற்றும் மற்றும் ‘வல்லமை’ அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

சட்டத்தரணி சுவஸ்திகா தனது உரையில் தற்கால பொருளாதார நெருக்கடி தொடர்பாகவும் அதனால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கருத்துக்களை முன்வைத்தார். தற்கால அரசியல், சமகால போக்கு ஆகியன பற்றியும் கலந்துரையாடினார்.

இதேவேளை சமூக ஆர்வலர்கள் சட்டத்தரணி சுவஸ்திகாவிடம் தற்காலப் பிரச்சினைகளில் அதிகளவாக போதைப் பொருள் பாவனை மற்றும் சமூகO பிரச்சனைகள் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதேவேளை ‘மார்ச் 12 இயக்கம்’ தொடர்பான கருத்துக்களும் பகிரப் பட்டன.










# வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கான அனுமதி தொடர்பில் கலந்துரையாடல்

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் மத்திய வங்கி உள்ளிட்ட நிறுவனங்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இதுவரை இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

இதனிடையே, வாகன இறக்குமதிக்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.



# பல்கலையில் தொடர் போராட்டம் கல்விசாரா ஊழியர்கள் தீர்மானம்!

## மே 2 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல்

அனைத்துப்ப ல்கலைக்கழகங்களிலும் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட கல்விசாரா ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர் எனப்பல்கலைக்கழகத் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்கப் போராட்டம் மே மாதம் 2 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென ஒன்றியத்தின் இணைத்தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்துள்ளார்.

இதனால், பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தடைப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் தொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி கலந்துரையாடின என அவர் குறிப்பிட்டார். இதன்போது, தமது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தமக்கு அறிவித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு மேலும் அழுத்தத்தை வழங்கும் வகையில், அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக, பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைத்தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தில் 15 வீதம் குறைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பளப் பிரச்சினையை நிவர்த்திக்குமாறு கோரி கடந்த காலங்களில் பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்துமா நோயாளர்கள் அதிகம் பதிவாகும் நாடுகளில் இலங்கை

நாட்டின் 10 முதல் 15 வீதமான குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு ஆஸ்துமா நோய்க்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆஸ்துமா நோயாளர்கள் அதிகளவில் பதிவாகும் நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக அதன் தலைவர் விசேட வைத்தியர் நெரஞ்சன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆஸ்துமா நோய் தொற்றா நோயாகக் காணப்பட்ட போதிலும், பரம்பரை ரீதியாக, அல்லது நீண்ட கால அடிப்படையில் இந்த நோய் உருவாகலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலகுவான மற்றும் சிக்கல்கள் அற்ற மருந்துகளின் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டால், ஆஸ்துமா நோயை முழுமையாக கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்துமா நோய் கட்டுப்படுத்தப்படாவிட்டால், பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் எனவும் இலங்கை சுவாச நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் நெரஞ்சன் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது போகின்றமை, இதன் காரணமாக ஏற்படக்கூடிய உள மற்றும் சமூக ரீதியான சிக்கல்கள் ஆகிய விளைவுகள் இந்த நோய் கட்டுப்படுத்தப்படாமையினால் ஏற்படக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலத்திற்கு ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தாமல் விடுகின்ற பட்சத்தில், சுவாசக் கட்டமைப்பில் ஏற்படக்கூடிய கோளாறுகளினால் மரணம் ஏற்படலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், ஆஸ்துமாவை இலகுவாகக் குணப்படுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# 13 வயதுச் சிறுமியின் கர்ப்பத்தின் மர்மம் கொழும்ப்பில் மருத்துவ விசாரணைகள்!

13 வயதுடைய சிறுமியொருவர் மர்மமான முறையில் கர்ப்பமானார் எனக் கூறப்பட்ட சம்பவம் தொடர்பான மேலதிக மருத்துவ விசாரணைகளுக்காக, சிறுமி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஹெட்டிபொல பொலிஸார் மற்றும் உரிய வைத்தியர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சிறுமி கர்ப்பமானமைக்கான காரணம் தெரிய வராததால் மேலதிக விசாரணைகளுக்காக அவர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்னர், சிறுமியிடம் இருந்து உண்மைகளை பெற மருத்துவர்கள் முயற்சிப்பார்கள் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹெட்டிபொல பொலிஸ் பிரிவில் வசிக்கும் சிறுமி வயிற்று உபாதை



காரணமாக குளியாப்பிட்டிய வைத்தியசாலைக்கு சென்ற போது, அவர் 3 மாத கர்ப்பமாக இருப்பது தெரிய வந்தது.

எனினும், சிறுமி யாருடனும் தான் உடல் தொடர்பு வைத்தார் எனக் குறிப்பிடவில்லை. குளியாபிட்டிய சட்ட வைத்தியர் மேற்கொண்ட பரிசோதனையிலும், சிறுமி உடலுறவு கொண்டதற்கு வாய்ப்புக்கள் இல்லையென உறுதிபடுத்தியிருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2024




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும்.அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும். உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்தி சாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்த்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வு களையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும். அது உங்களுக்கு கவலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.04.2024




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக் தேவைகளை பூர்த்தி செய்துவீர்கள்.




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப் படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.










# யூனியன் அஷ்யூரன்ஸ் பாங்கசூரன்ஸ் சிறப்பை யூனியன் வங்கியுடன் கொண்டாடியது



இலங்கையின் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் நாளிகைக்கான டயமன்ட் விருதுகள் 2023 நிகழ்வை அண்மையில் பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது.

"ருடிெசநயமயடிடந டீசடைடயைஉந" (தகர்க்க முடியாத சிறப்பு) எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, பங்காண்மையின் வலிமை மற்றும் பாங்கசூரன்ஸ் துறையில் முன்னோடியாகத் திகழ்கின்றமைக்கான துரிதத் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

நிகழ்வில் இரு நிறுவனங்களினதும் நிறைவேற்று குழு அங்கத்தவர்கள், முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் அணி அங்கத்தவர்கள் பங்கேற்றிருந்ததுடன், யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் நாளிகையின் சாதனைகள் கௌரவிக்கப்பட்டது.

85 இற்கும் அதிகமான வெற்றியாளர்களின் சாதனைகள் கொண்டாடப்பட்டன. 2023 டயமன்ட் விருதுகளின் பிரதான அங்கமாக, வெற்றியாளர்களுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது மற்றும் ஊநுழு'ள டுழரபெந போட்டிக்கு தகைமை பெற்ற அங்கத்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றியாளர்களுக்கு பல்வேறு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் பணப் பரிசுகளுடன், வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகளும் அடங்கியிருந்தன.

சிறந்த வலய முகாமையாளருக்கான விருதை சமிந்த பெர்னான்டோ வெற்றியீட்டியதுடன், வலய முகாமையாளர் பிரிவில் உயர் கட்டண வருமான உருவாக்கத்துக்கான விருதை கசுன் டி சில்வா வெற்றியீட்டினார்.

வருடாந்த ஷீல்ட் சம்பியன் விருதை புறக்கோட்டை கிளை வெற்றியீட்டியதுடன், வரகாபொல, குளியாப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மொரட்டுவ, நாவல மற்றும் பொரளை ஆகிய கிளைகள் 2023 ஆம் ஆண்டுக்கான டயமன்ட்க்ளப் வெற்றியாளர்களாக கௌரவிக்கப்பட்டன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி வத்சலா அளுத்கெதர குறிப்பிடுகையில்,

"12 வருடங்களுக்கு மேலாக யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் யூனியன் வங்கி ஆகியன கொண்டிருக்கும் பங்காண்மையை வலியுறுத்துவது மாத்திரமன்றி, பாங்கசூரன்ஸ் நாளிகையைச் சேர்ந்த அனைத்து அணி அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளையும் கௌரவிப்பதாக டயமன்ட் விருதுகள் 2023 அமைந்திருந்தது.

யூனியன் வங்கியுடனான எமது பங்காண்மை என்பது எப்போதும் வியாபித்து வந்துள்ளதுடன், இலங்கையின் பாங்கசூரன்ஸ் பிரிவில் புதிய நியமங்களையும் ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்திலும் எமது பங்காண்மை மேலும் வலிமை பெறும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், அதனூடாக சமூகத்தில் காணப்படும் பாதுகாப்பு இடைவெளியை குறைப்பதில் முக்கிய பங்களிப்பை வழங்க எமக்கு ஏதுவாக அமைந்திருக்கும்." – என்றார்.






# பண்டிகைக்காலத்தில் 17 மில்லியனுக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு மக்கள் வங்கி அனுசரணை




இலங்கையில் மிகப் பாரிய வாடிக்கையாளர் தளத்துடன், டிஜிட்டல் வங்கிச்சேவைப் புத்தாக்கத்தில் முன்னோடியான மக்கள் வங்கி, ஏப்ரல் 1 முதல் 15 வரையான புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் ரூபா 568 பில்லியனுக்கும் மேற்பட்ட தொகையுடன், 17 மில்லியனுக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு அனுசரணையளித்துள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளது.

நாட்டில் அன்றாட நிதியியல் செயல்பாடுகளில் அதன் முக்கிய வகிபாகத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது.

747 கிளைகள் மற்றும் சேவை மையங்கள், மிகவும் பிரபலமான டிஜிட்டல் வங்கிச்சேவை தளங்கள் டங்கலாக, தனது விசாலமான வலையமைப்பின் அனுகூலத்துடன், மக்கள் தனது வாடிக்கையாளர்களுக்கு ஈடு இணையற்ற சௌகரியத்தையும், வசதியையும் வெற்றிகரமாக வழங்கியுள்ளது.

இந்த விசாலமான உட்கட்டமைப்பானது, வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தி, நாடெங்கிலும் தனது சேவை கிடைக்கப்பெறுவதை விஸ்தரிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

வங்கியின் புத்தாக்கமான டிஜிட்டல் தளங்கள் இலங்கையில் டிஜிட்டல் வங்கிச்சேவைத் துறையில் புதிய தரஒப்பீட்டு நியமங்களை வங்கி நிலைநாட்டி வருகின்றது.

2 மில்லியனுக்கும் மேற்பட்ட இயங்குநிலை பயனர்களைக் கொண்டுள்ளதுடன், 50 க்கும் மேற்பட்ட வேறுபட்ட நிதியியல் பரிவர்த்தனைகளுக்கு டிஜிட்டல் வழிமுறை அணுகலை வழங்குகின்றது.

கிட்டத்தட்ட ரூபா 3.0 ரில்லியன் திரட்டிய சொத்துக்களுடன் நாட்டில் இரண்டாவது பாரிய நிதியியல் சேவை வழங்குனராகத் திகழ்ந்து வருகின்ற மக்கள் வங்கி, தனது சந்தை ஸ்தானத்தை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருகின்றது. 14.7 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன், தற்போது நாட்டில் மிகப் பாரிய வாடிக்கையாளர் தளத்திற்கு தனது சேவைகளை வழங்கி வருகின்றது.

“மக்கள் வங்கியானது குறிப்பிட்ட சில வாடிக்கையாளர்களுக்கு மாத்திரம் சேவைகளை வழங்குவதை விடுத்து, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பயன்கிட்டும் வகையில் தங்குதடையற்ற மற்றும் திறன்மிக்க சேவைகளை வழங்குவதில் டிஜிட்டல் வங்கிச்சேவையின் எல்லைகளை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் விரிவுபடுத்தி வருகின்றது,” என்று மக்கள் வங்கியின் கிளை முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் திரு. நளின் பத்திரகே குறிப்பிட்டார்.

“புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் எமது வலுவான செயல்பாடுகள் பல மில்லியன் கணக்கான இலங்கை மக்கள் எமது ஆற்றல் மற்றும் நம்பகத்தன்மை மீது கொண்டுள்ள விசுவாசத்திற்கு இது சிறந்த சான்றாக உள்ளது,” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.




# இளைஞர், யுவதிகளின் கனவுகளை நனவாக்கும் இலங்கை வங்கியின் இளையோர் கடன் திட்டம்



இலங்கை வங்கியானது இளையோர்களிடையே தொழில் முயற்சி உணர்வை வளர்க்கும் முயற்சியில், புத்தாக்கச் சிந்தனைமிகு இளையோரினதும் இளம் தொழில்முயற்சியாளாகளதும் கனவுகளை நனவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட இளைஞர் கடன் திட்டத்தை பெருமையுடன் அறிமுகப்படுத்துகின்றது.

வருடத்திற்கு வெறும் 7 சதவீதம் என்ற கவர்ச்சிகரமான வட்டி வீதத்துடன் அதிகபட்சமாக 500,000 ரூபாய் கடன் தொகையை வழங்கும் இக்கடன்திட்டம் அடுத்த தலைமுறையின் லட்சியங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கியின் இளையோர் கடன் திட்டம் என்பது வெறுமனே நிதி உதவி மட்டுமல்ல. இதுவொரு புதிய தலைமுறை தொழில்முயற்சியாளர்களை வளர்த்தெடுக்கும் திட்டமாகும்.

குறைந்தபட்சம் 10,000 இளைஞர், யுவதிகளை வலுவூட்டுவதை இலக்காகக் கொண்டுள்ள இந்தத் திட்டம சுயதொழில்முயற்சிகளை தொடங்கும் அல்லது ஏற்கனவே உள்ள வணிகங்களை விரிவுபடுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு கலங்கரை விளக்கமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை வங்கியின் இளையோர் கடன் திட்டத்தின் விதந்து குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று அதன் அனைவரையும் உள்ளடக்கும் தன்மையாகும்.

பாரம்பரிய கடன் திட்டங்களைப் போன்று இத்திட்டத்துக்கு சொத்து அடமானங்கள் போன்ற பிணைகள் எதுவும் தேவையில்லை.

சொத்துக்கள் என்று எதுவும் இல்லாத ஆனால் எல்லையற்ற ஆற்றலும், தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அனைத்துத் தரப்பு இளையோருக்குமான கதவுகளைத் திறப்பதே இத்திட்டத்தின் தனிச்சிறப்பாகும்.

இலங்கை வங்கியாகிய எமக்கு புத்தாக்கச் சிந்தனை, அணுகுமுறை என்பவற்றின் பலத்தில் பெருநம்பிக்கையுண்டு. அதனால்தான், இத்திட்டத்துக்குத் தகுதியான 30 வயதுக்குட்பட்ட இளையோர்கள் முன்னர் கடன் பெற்றிருக்கிறார்களா அவ்வாறு பெற்றிருந்தால் அதனைக் கட்டி முடித்திருக்கிறார்களா என்ற வரலாறுகள் எவற்றையும் கருத்திற்கொள்ளாமல் அல்லது அவர்களின் பொருளாதாரப் பின்னணியைப் பொருட்படுத்தாமல் அவர்களின் திறமையை மட்டும் எடுத்துக்காட்டும் திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் கடன்களை வழங்க நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

உங்களிடம் வியாபார உலகைப் புரட்டிப் போடவல்ல யோசனை இருந்தாலும் அல்லது துளிர்விடக் காத்திருக்கும் உங்களின் இலட்சியத் திட்டமாக இருந்தாலும் இலங்கை வங்கியின் இளையோர் கடன் திட்டம் உங்களுக்கு கரங்கொடுக்கத் தயாராகவுள்ளது என்பதை மட்டும் நினைவிற்கொள்ளுங்கள்.

பொருளாதாரக் கட்டுப்பாடுகள் உங்களைத் தடுத்து நிறுத்த முடியாது. இலங்கை வங்கியுடன் கைகோர்த்து உங்கள் தொழில் முனைவோர் கனவுகளுக்கு உருக்கொடுங்கள், இலங்கை வங்கியின் இளைஞர் கடன் திட்டத்திற்கு இன்றே விண்ணப்பித்து ஒளிமயமான, வளமான எதிர்காலத்தை நோக்கிய உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்.

இலங்கை வங்கியின் அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கடன் கிளைச் செயற்பாடுகள் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் திரு. ஆர்.எம்.என். ஜீவந்த இது தொடர்பில் தெரிவிக்கையில்,

“எமது இளம் தொழில்முனைவோர் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளைக்குச் சென்று வங்கியின் இளையோர் கடன் திட்டத்துக்கு விண்ணப்பிப்பதன்மூலம் உலகம் முழுதும் விரவிக்கிடக்கும் வாய்ப்புகளைக் கண்டறிய முடியும்.”- என்றார்.

இலங்கை வங்கியானது கடந்த 84 ஆண்டுகளுக்கும் மேலாக, தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உலகளாவிய வாய்ப்புகளை வழங்கி இலங்கையின் நிதித் துறையில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது.

தீவு முழுவதும் உள்ள வங்கியின் பரவலான சேவை மைய வலையமைப்பும் அதன் அதிநவீன தொழில்நுட்பங்களும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான நிதிச் சேவைகளை வழங்கி வருகின்றன.

அது மட்டுமல்லாமல் வங்கி 2023 ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்தின் ‘த பாங்கர்’ சஞ்சிகையால் உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் இலங்கையின் ஆகச்சிறந்த வங்கியாகவும் கௌரவிக்கப்பட்டதோடு ‘பிராண்ட் பினான்ஸ் லங்கா’ நிறுவனத்தாலும் இலங்கையின் முதற்தர வங்கி எனக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.